பக்கங்கள் 13+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 08 திங்கட்கிழமை 20.01.2025 | அதிர்வு 172

## சீரற்ற காலநிலையால் கிழக்கு மாகாணத்தில் அதிகமானோர் பாதிப்பு

கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இராணுவ முகாமிலிருந்து பாதாளக் குழு வசம் சென்ற 73 துப்பாக்கிகளில் 38 மீட்பு!

### ஜனாதிபதி அநுரகுமார பரபரப்பு தகவல்



”இராணுவ முகாம்களிலுள்ள சில ஆயுதங்கள் பாதாளக் குழுக்கள் வசம் சென்றுள்ளன. பாதாளக் குழுக்களிடம் பணம் பெற்று துப்பாக்கிச்சூடு நடத்துபவர்களும் இராணுவத்துக்குள் இருக்கவே செய்கின்றனர். பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் துடைத்தெறியப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 03



# ரணிலின் ஆட்டம் ஆரம்பம்

### மாற்று நாடாளுமன்றம் ஸ்தாபிப்பு

முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுடன் மாற்று நாடாளுமன்றத்தையும், நிழல் அமைச்சரவையையும் ஸ்தாபிப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. 03

## விஜயமுனி சொய்சா பிணையில் விடுவிப்பு



சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட லொறியைப் பயன்படுத்தினார் எனக் கூறி கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று கைது செய்யப்பட்ட அவர் இன்று காலை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். 03

## இளம் பெண்ணின் சடலம் மீட்பு!





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காடு ரயில் கடவையின் அருகில் இளம் பெண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 4.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் இந்தப் பெண் மோதி உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தோட்டக் காட்டில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## “படித்தும் வேலையில்லாமல் திரியும் அவலம்”

# வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரிலுள்ள உலகத் தமிழாராச்சி படுகொலை நினைவுத் தூபி முன்பாக இன்று காலை இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இதன்போது அவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிக் கொண்டு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குப் பேரணியாகச் சென்றனர்.

“மேலும் வேலை வேண்டும் வேலை வேண்டும் பட்டதாரிகளுக்கு வேலை வேண்டும், பரீட்சைகள் எழுதி எழுதிப் பயனில்லாமல் போய்விட்டது, அரசாங்கமே பட்டதாரிகளுக்கு வேலையை வழங்கு, படித்தும் வேலையில்லாமல் திரியும் அவலம்” எனப் பல்வேறு கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# 20 நாள்களில் 8 துப்பாக்கிச்சூடுகள் 6 பேர் உயிரிழப்பு; 5 பேர் படுகாயம்

இந்த ஆண்டு இதுவரையான 20 நாள்களில் இடம்பெற்ற 8 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 6 பேர் கொல்லப் பட்டுள்ளனர் என்று இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 4 பேர் திட்டமிட்ட குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படு கின்றனர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் அலுவலகம் தெரிவித் துள்ளது. மேலும், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் படுகாய மடைந்துள்ளனர்.





# கல்லாறு பகுதியில் விபத்து! 7 பேர் வைத்தியசாலையில்!!

திருகோணமலை – சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள கல்லாறு பகுதி யில் நேற்று இரவு சிறிய ரக பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் திரு கோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி நோக்கிபி பயணித்த பஸ்ஸே இந்த விபத்துச் சம்பவத்தை எதிர்நோக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலி ஸார் முன்னெடுத்து வருகின்ற னர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**விஜயமுனி...**

இதன்போது அவரை 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும், இந்த வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 6 திகதியன்று மீண்டும் விசா ரிக்கவும் உத்தரவிடப்பட்டது.

**சீரற்ற காலநிலையால்...**

ஐந்து மாகாணங்களில் 5 ஆயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயி ரத்து 930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வட மத்திய மாகாணத் தில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 356 பேரும், வடக்கு மாகாணத்தில் 491 குடும்பங்களைச் சேர்ந்த 1,496 பேரும், கிழக்கு மாகாணத்தில் 5 ஆயிரத்து 86 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 806 பேரும், மத்திய மாகாணத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேரும், ஊவா மாகாணத்தில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேரும் என மொத்தமாக 5 ஆயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 930 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர் என்றும் அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், மூன்று பேர் காயமடைந்துள்ளனர் எனவும், 98 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும், 77 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேர் எட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

**இராணுவ முகாமில்...**

களுத்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

“பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட பொலிஸ ாரின் தலையீட்டுடன் இலங்கை வரலாற் றில் அதிகளவான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. பணம் மற்றும் ஆயுதங்கள் என்பனவும் மீட் கப்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள பயங்கரமானதொரு நிலை தொடர்பான தகவலொன்றை வெளியிடுகின்றேன். இராணுவ முகாம் களில் உள்ள ஆயுதங்கள் வெளி யில் வந்துள்ளன. குறிப்பாக இராணுவ முகாமொன்றிலிருந்து 73 ரி – 56 துப்பாக்கிகள் பாதாளக் குழுக்கள் வசம் சென்றுள்ளன. அவற்றில் 38 ஐ நாம் மீளப்பெற்றுள்வோம். எஞ்சிய 35 ஐத் தேடி வருகின்றோம்.

இராணுவத்தில் சிறப்பாகச் செயற் படக்கூடிய, புகழ்பெற்ற அதிகாரிகள் இருக்கும் நிலையில், பாதாளக் குழுக் களுக்காக வேலை செய்யும் சிலரும் இருக்கவே செய்கின்றனர். பாதாளக் குழுவிடம் பணத்தை பெற்றுவிட்டு சூடு நடத்திவிட்டு முகாம்களுக்குள் செல்பவர் களும் இருக்கின்றனர். இப்படியான 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதாளக் குழுக்களுக்கு இடமில்லை. எல்லாவற்றையும் நாம் சுத்தம் செய்வோம். அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலி ஸார் இருக்கின்றனர். அவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு எதிர்பார்க்கின் றோம்.” – என்றார்.

**ரணிலின் ஆட்டம்...**

கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த, தற்போதைய நாடாளுமன்றத்தில் இடம்பெறாத அனைத்து கட்சிகளினதும் உறுப்பினர்களுக்கு, மாற்று நாடாளு மன்றத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

மாதமொன்றில் 8 நாள்கள் நாடாளு மன்றஅமர்வுநடைபெறும். எனவே, குறித்த நாட்களில் மாற்று நாடாளுமன்றத்தை யும் கூட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்பின்னர் நிழல் அமைச்சரவை யும் ஸ்தாபிக்கப்பட்டு, விடயதானங்களும் ஒதுக்கப்படவுள்ளன.

சபாநாயகர், சபை முதல்வர் மற்றும் கோப், கோபா குழு உள்ளிட்டவற்றுக்கும் மாற்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட வுள்ளனர்.

குறித்த மாற்று நாடாளுமன்றத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதிகள் அழைக்கப்படவுள்ளனர் எனவும், கருத்துரைகளை ஆற்றுவதற் காக உலகத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது எனவும் தெரியவரு கின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# படை எங்கு தேவை?

புது வருடம் பிறந்த பின்னர் நாட்டில் இதுவரை 8 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றில் ஐந்தில் உயிர்ப் பலிகள் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஐவர் படுகாயம் அடைந்திருக்கின்றனர்.

இவற்றில் பெரும்பாலானவை தெற்கில் நடைபெற்றவை. கடைசிச் சம்பவம் நேற்றுப் பிற்பகலில் கொழும்பு மவுண்டலவேனியாவில் நடைபெற்றது. அதில் 24 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இதேசமயம் இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ரி56 ரக இயந்திரத் துப் பாக்கிகள் 73 காணாமல் போய்விடன என்றும், அவை பாதாள உலகக் குழுக்களின் கைகளில் சிக்கி உள்ளன என்றும் அதிர்ச்சித் தகவலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவே வெளியிட்டிருக்கிறார்.

இந்த அதிர்ச்சித் தகவல் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய கவலையை ஏற்படுத்தி இருப்பதாகவும் அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

காணாமல்போன இயந்திரத் துப்பாக்கிகளில் 38 துப்பாக்கிகளை பாதுகாப்புத் தரப்பினர் ஒருவாறு மீட்டெடுத்துள்ளனர் என்றும், இவை தொடர்பில் 13 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அரசுத் தரப்பு வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன.

பாதுகாப்புத் துறையிலேயே பரவலான சீர்கேடு உருவாகி இருப்பதை இந்த நிலைமை புட்டுக்காட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மன்னாரில் நீதிமன்றுக்கு முன்னால் வைத்து இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் தொடர்பில் இராணுவத்தில் தற்போது கடமையாற்றும் சிப்பாய் ஒருவரும் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரும் உட்பட மூவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவரே மேற்படி படுகொலைகளுக்கான துப்பாக்கிச் சூடுகளை நடத்தியவர் என்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் நகை கடை ஒன்றில் பெருந்தொகைப் பணம் சூறையாடப்பட்ட சம்பவத்தில் இலங்கைப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தகவலும் வெளியாகி இருக்கின்றது.

புது வருடத்தின் பின்னர் இடம்பெற்று வரும் இந்தச் சம்பவங்கள் தெளிவான ஒரு விடயத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அரசாங்கம் 'கிளீன் சிறிலங்கா' என்ற நடவடிக்கையை ஆரம்பிப்பதாக பெரு மெடுப்பில் ஆரவாரம் காட்டினாலும், முதலில் பாதுகாப்புத் துறைகளில் இருந்த ஓட்டைகளை அடைத்து, பாதுகாப்புத் துறையைச் சுத்தம் செய்வதுதான் பிரதான விவகாரமாக இதன் மூலம் தெளிவாகியிருக்கின்றது.

இலங்கையை இப்போது ஆட்டிப் படைக்கும் பிரச்சினை தமிழ் மக்கள் கோரும் தனிநாட்டுப் பிரிவினைச் சிக்கல் அல்ல, அதை 'பயங்கரவாதமாக' அர்த்தப் படுத்தி, சித்திரிக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசு, தன்னுடைய 'அரச பயங்கரவாதம்' மூலம் அதனை வெற்றி கொண்டிருக்கின்றது என்பதுதான் யதார்த்த உண்மை.

இப்போது நாட்டுக்குப் பெரும் சிக்கலாக உருவாகி வருவது தென்னிலங்கையை ஆட்டிப் படைக்கும் பாதாள உலகக் குழுக்களின் அட்டகாசமும் போதை வஸ்து வர்த்தகமும்தான்.

இவற்றில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கின்றவர்கள் தமிழர் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் அல்லர். தென்னிலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக் குழுக்கள்தான். நாட்டைச் சுத்தப்படுத்தும் விடயத்தில் பாதுகாப்பு துறையினரின் பங்களிப்பு இந்தத் தென்னிலங்கைப் பாதாள உலகக் குழுக்களை கையாள்வதில்தான் இப்போது முனைப்பாக - அவசியமாக - தேவைப்படுகின்றது.

அப்படியானால் பாதுகாப்பு துறைகளின் - பிரதானமாக இராணுவத்தின் - பங்களிப்பும் பிரசன்னமும் அதிகம் தேவைப்படுவது தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் அல்ல. மாறாக, பாதுகாப்புத் துறைகளின் சிரத்தை - கவனம் - அவதானம் - எல்லாம் திருப்பப்பட வேண்டிய தளம் பாதாள உலகக் குழுக்கள் மும்முரமாகச் செயல்படுகின்ற தென்னிலங்கைதான்.

அந்தக் கடப்பாட்டை - யதார்த்தப் புறநிலைமையை - உணர்ந்து, படையினரின் பிரசன்னத்தை தென்னிலங்கை பால் திருப்பாமல், பேரினவாத மேலாதிக்க சிந்தனையில் தன்னுடைய படைப் பிரசன்னத்தை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் குவித்து வைத்திருக்கின்றது அரசு. இனவாத சிந்தனையில் மேற் கொள்ளப்படும் இந்த முட்டாள்தன நடவடிக்கை நாட்டைத்தான் கட்டழிக்கப் போகின்றது.





# சாரண ஆணையாளர்களுக்கு ஒருநாள் செயலமர்வு கொழும்பில்

(எம்.எப்.றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு கொழும்பு சாரணர் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது.

பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோவின் வழிகாட்டலின் கீழ் தலைமைக் அலுவலகப் பிரதி, உதவி ஆணையாளர்களால்பல்வேறுபட்டதலைப்புக்களில் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில் சகல மாவட்டங்களில் இருந்தும் ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆண், பெண் சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# கலாசார மையத்தின் பெயர் மாற்றம்; மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஈழத் தமிழர்களின் கலாசார பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதை நோக்கமாக கொண்டு இந்திய அரசால்வழங்கப்பட்ட இந்தக்கலாசார மையம் தமிழ் மக்களின் அடையாளமாகத் தற்போது காணப்படுகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட வேளையில், அப்போதைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசிடம் என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே குறித்த கலாசார மையத்தை இந்தியா எமக்கு அளித்திருக்கின்றது.



யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அதனை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் அனைத்தும் எம்மால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே இசந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உலகப் பொதுமறையான திருக்குறளை எமக்களித்த திருவள்ளுவர் எமது மதிப்பிற்குரியவர். அவரையும் அவருடைய ஆளுமையையும் போற்றிப் புகழ்வதில் தமிழர்கள் யாருமே பின்நிற்கப் போவதில்லை. கடந்த காலங்களில் இந்திய அரசால் வழங்கப்பட்ட திருவள்ளுவர் சிலைகளை எமது மக்கள் ஆர்வத்துடனும் பெருமிதத்துடன் பிதிஷ்டை செய்து பராமரித்து வருகின்றனர்.

எனினும் இலங்கையின் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் அடையாளங்களுள் ஒன்றான ‘யாழ்ப்பாணம்’ என்ற பெயர் நீக்கப்பட்டிருப்பதானது, தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முனைகின்ற செயற்பாடா என்று எண்ணத் தோன்றுகிறது.

தீய சக்திகளின் மறைகரம் இந்தப் பெயர் மாற்றத்தின் பின்னணியில் இருக்குமோ என்ற நியாயமான சந்தேகத்தை எமது மக்களுக்கு ஏற்படுத்தி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான சந்தேகங்கள், இந்த நாட்டில் புரையோடிப் போய் இருக்கும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவசியமான தேசிய நல்லிணக்க முயற்சிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த வகையில், இதனுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்த இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கையின் தற்போதைய புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் போன்றோர் பெயர் மாற்றப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.– என்றார்.



# ‘திருவள்ளுவர் கலாச்சார மையம்’ பெயர் மாற்றியது குற்றம் அல்ல!

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கலாச்சார மையத்தைத் திருவள்ளுவர் கலாச்சார மையமாக பெயர் மாற்றம் செய்தமை குற்றம் அல்ல. ஆனால் பெயர் மாற்றம் தொடர்பில் புத்திஜீவிகளின் கருத்து பெறப்பட்டிருந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் கடற்தொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இன்று (20) திங்கட்கிழமை யாழ். பலாலி வீதி கந்தர்மடப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசின் நிதி பங்காளிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ். கலாச்சார மையத்துக்கு திருவள்ளுவர் கலாச்சாரம் மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்து கொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின் போது தான் அவதானித்தேன்.

திருவள்ளுவர் கலாச்சார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழ்ப்பாணத்துக்கே உரித்தான பெயர்களான யாழ். கலாச்சார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாச்சார மையம் என்று காட்சிப் படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமையும் கவலை தரும் விடயமும்



கூட.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சிலவேளை தெரியாமல் சில தவறுகள் இடம் பெற்று இருக்கக் கூடும்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப் பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமா அது தொடர்பில் கலந்துரையாடி இனி வரும் காலங்களில் தவறுகள் இடம்பெறா வண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.- என்றார்.





# ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் மாணவருக்குக் கற்றல் உபகரணம்

(எஸ்.நிதர்ஷன்)

ஊர்காவற்றுறை பொலிஸாரின் ஏற்பாட்டில் கொழும்பு லயன்ஸ் கழகத்தால் வேலணை கல்வி கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல் உபகரண பொதி வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் இன்று (20) திங்கட்கிழமை இடம்பெற்றது .

இதன்பொழுது 100 மாணவர்களுக்கு உரிய புத்தகப் பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதேவேளை, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப்



பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, ஜே.பி.எஸ். ஜெயமகா, ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள், பெற்றோர்கள் , மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# ‘முதல் கனவு’ கவிதை நூல் வெளியீடு!

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரிய போரதீவு பட்டாபுரம் இளைஞர் ஒன்றியத்தால் கிஷாலினியின் “முதல் கனவு” கனாக் கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று (19) பெரிய போரதீவு எம்.பிறதேர்ஸ் மண்டபத்தில் கே.தினேஷ் தலைமையில் இடம் பெற்றது.

பெரிய போரதீவு செல்வி கிஷாலினி ரவீந்திரனின் முதல் கனவு கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பொதுச் சுகாதார பரிசோதகர் குபேரன், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய அறங்காவலர் சபையினர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நிகழ்வில் இரா.சாணக்கியன் கருத்து தெரிவிக்கையில், ஒரு இனம் தேசிய இனமாக கருதப்படுவதற்கு மொழி, கலாசாரம், பண்பாடு போன்றவை முக்கியமான விடயங்கள். அவற்றை எமது இளம் சமுதாயம் தொடர்ச்சியாக கொண்டு செல்ல வேண்டும் என்பதுடன் அடுத்தடுத்த சந்ததியினருக்கும் இவற்றை சரியான கடத்த வேண்டும்.

அப்போது தான் நாம் அனைவரும் இணைந்து எமது இலக்கினை அடையலாம். அதற்கு அனைத்து கிராம மட்ட அமைப்புக்களும் கிஷாலினி போன்ற யுவதிகளினுள் மறைந்துள்ள கலையார்வங்களை வெளிக்கொணர வேண்டும்.

அந்த வகையில் இளைஞர் ஒன்றியம் இது போன்ற நிகழ்வுகளை செய்வதை வெகுவாகப் பாராட்டுகின்றேன். அத்துடன் இந்தக் கவிதை நூலை எனது செலவில் போரதீவுப்பற்று பிரதேசத்தில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன்.– என்றார்.





# விளைந்த நெல்லை அறுவடை செய்யவிடாது செயற்பட்டவர்களே நஷ்ட ஈடு தரவேண்டும்!

## *மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை*

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் விளைந்த வேளாண்மையை அறுவடை செய்யவிடாது விவசாய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட திகதியில்தான் அறுவடை செய்ய வேண்டும் என்று சிலர் அமைப்புகள் என்ற பெயரில் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு சென்று தடுத்தனர். இதனால் இன்று மழை வெள்ளத்தால் ஆயிரக் கணக்கான ஏக்கர் வேளாண்மை வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதைத் தடுத்தவர்களே இதற்கான நஷ்டத்தை தர வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற கால நிலை காரணமாக இரு தினங்களாகப் பெய்துவரும் கன மழையால் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

2024-2025 ஆண்டு பொரும் போக வேளாண்மை செய்கை தொடர்பாக முன்னோடி கூட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நெல் அறுவடை என தீர்மானிக்கப்பட்டு முடிவு எட்டப்பட்டது. இருந்தபோதும் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் அறுவடை செய்யும் நிலையில் வேளாண்மை விளைந்திருந்தது. இந்த நிலையில் அறக்கொட்டி பூச்சியின் தாக்கமும் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் 18 ஆம் திகதி தொடக்கம் கனமழை பெய்யும் என்றும் விவசாயிகளை அவதானமாகச் செயற்படுமாறும் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து அரச அதிபரை சந்தித்து கனமழைவர இருக்கின்றது. 10 நாள்களுக்கு முன்னர் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் பாரியளவில் விளைந்த வேளாண்மை உள்ளது. ஆகவே அறுவடையை செய்ய அந்தந்த அமைப்புக்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்குமாறு கேட்டுக் கொண்டோம்.

அதற்கு அரச அதிபர், வாய்மூலமாக ஒரு உத்தரவு தந்தார். அமைப்புக்கள் ஓம் என்றால் உடனடியாக அறுவடை செய்யுமாறும் மழை வெள்ள பாதிக்காது செய்யுமாறும் தெரிவித்தார்.

அந்த வகையில் ஒரு விவசாயி அறுவடை செய்ய ஆரம்பித்ததை அடுத்து, சிலர் அமைப்புக்கள் என தெரிவித்துக் கொண்டு - வேறு பெயர்களை சூட்டிக் கொண்டு - பச்சைக்காய்களை வெட்டப் போகின்றார்கள் என்று பொய்பிரச்சாரத்தை தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து, அறுவடை செய்வதைத் தடுத்தனர்.

இதனால் இன்று கனமழை வெள்ளத்தால் வயல் நிலங்கள் தண்ணீரில் மூழ்கி மிதக்கின்றன.

விவசாய அமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து கடந்த 10 வருடம் விவசாய அமைப்புத் தலைவராக இருந்து சேவை செய்த நான் கடந்த 3 வருடத்துக்கு முன்னர் எனது வயது காரணமாக அதில் இருந்து விலகி விட்டேன்.

தற்போது வயல் நிலங்களைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கின்றது. ஒரு தொழிலைச் செய்யப் போறவன் அந்தத் தொழிலில் அனுபவம் பெற்றவனாக இருக்கவேண்டும். ஆனால் எதுவுமே தெரியாதவன் ஒரு ஏக்கர் காணி இல்லாதவர்கள் இங்கு வந்து இந்த விவசாயத்தைபற்றி கதைக்கிறார்கள்.

பெரும்போக செய்கை என்பது ஒருவருக்கு முந்தும் ஒருவருக்கு பிந்தும். இருந்தபோதும் விளைந்த வேளாண்மை நிக்காது இந்த மழை காரணமாக ஆயிரக் கணக்கான ஏக்கர் வேளாண்மை தண்ணீரில் மிதக்கின்றது. அத்துடன் அறக்கொட்டி பூச்சி இருந்தும் விளைந்த வேளாண்மையை வெட்டிக் கொள்ள முடியாத நிலையை சிலர் உருவாக்குகின்றனர் என்றால் இவர்கள் என்ன விவசாயிகள்.

மூன்று அழிவுகள் இடம்பெற்றுள்ளன. வெள்ளம், பூச்சி, நேரத்துக்கு வெட்டவில்லை இந்த காரணத்தால் இந்த அழிவு ஏற்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு தீர்மானத்தை மாற்றி தந்திருக்கலாம். விளையாதவர்கள் பிந்தி அறுவடை செய்யமுடியும். ஆனால் அவர்கள் நகரில் இருந்துகொண்டு பச்சைக்காய் என சொல்லிக் கொண்டு எங்களுடைய வாழ்வாதாரத்தை நாசமாக்குகின்ற வேலையை செய்கின்றனர்.

முழு நெல்லும் முளைத்திதுவிட்டது இதனை அறுவடை செய்தும் பிரயோசனம் இல்லை இது சாப்பாட்டுக்கும் எடுக்க முடியாது. வியாபாரியும் எடுக்க மாட்டான்.

மனித உரிமையில் முறைப்பாடு செய்தவர்களிடம் இந்த நஷ்டத்தை பெற்றுத் தாருங்கள்.

அரச அதிபர் விளைந்த வேளாண்மையை வெட்டுமாறு தெரிவிதார். அவர் தெரிவித்த மாதிரி நாங்கள் வெட்டியிருந்தோம் என்றால் பாதுகாப்பாக நெல்லை எடுத்திருக்கலாம். ஆனால் தற்போது உன்னிச்சைக் குளம் வான் கதவு திறக்கப்பட்டுள்ளது. இதனால் பாரிய அவு ஏற்பட்டுள்ளது.

விவசாயம் தெரியாத சில வெளி நபர்கள் அமைப்பு என்று இருப்பவர்கள் தடைபோட்டு எமது வேளாண்மை நாசமாகியுள்ளது. இந்த நஷ்டத்தை அரசு எப்படித் தரமுடியும். மனித உரிமை ஆணைக்குழுவில் போய் தடை போட்டவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன பதில் சொல்லபோகின்றனர்.- என்றனர்.

# விற்கப்பட்ட வாடகைக் காரை மீட்ட சம்மாந்துறை பொலிஸார்!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ் )

கொழும்பில் ஒருவரிடம் இருந்து 5 மாத காலத்துக்கு வாடகை அடிப்படையில் கார் ஒன்றை மதுகம பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் பெற்றுள்ளார். காரை வாடகைக்கு பெற்றவர், அதனை சம்மாந்துறைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

இந்த நிலையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் அதிரடியாக தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் அந்தக் காரை மீட்டுள்ளனர்.

காரின் உரிமையாளர் தமது கார் குறித்து வாடகைக்குப் பெற்றவரிடம் விசாரித்த போது, அவர் முரண்பாடான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அத்தோடு கார் களவு போய்விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, தமது கார் சம்மாந்துறை பிரதேசத்தில் இருப்பதை அறிந்து கொண்ட உரிமையாளர், சம்மாந்துறை பொலிஸில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (19) முறைப்பாடு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் காரை மீட்டுள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இந்தக் காரை 5 மாத வாடகைக்கு நபர் ஒருவர் பெற்றுள்ளார். அதனை ஒரு கோடி 20 லட்சத்துக்கு அதிகமான தொகைக்கு சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், சார்ஜன் ஏ.பி.நபார் உள்ளிட்ட குழுவினர் இந்த விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பான, மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் குருதி வங்கி அமைக்கப்பட்டது!

பசுந்தேசம் அமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக அமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் சர்வதேச மருத்துவ சுகாதார கழகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குருதி வங்கி அமைக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த குருதி வங்கிக்கு நிரந்தர மருத்துவராக மருத்துவர் பிரதீபன் அண்மையில் நியமிக்கப்பட்டார்.

தற்போது குருதி வங்கியானது பதிவுசெய்யப்பட்டு நேற்று (19) உத்தியோக பூர்வமாக இலங்கையின் தேசிய குருதி வங்கிகளின் இணையத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது.

இந்த நிலையில் முதன்முதலாக நேற்று (19) குருதிக் கொடை நிகழ்வு நடைபெற்றது.

இந்தக் குருதிக்கொடை நிகழ்வுக்கு பசுந்தேசம் அமைப்பு, விதையனைத்தும் விருட்சம் அமைப்பு, இயற்கையின் நண்பர்கள் இயக்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள் அழைக்கப்பட்டிருந்தன.



தென்மராட்சி பகுதியில் குருதிக் கொடை செய்ய விரும்புபவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் குருதி வங்கியுடன் தொடர்பு கொண்டு குருதிக்கொடை வழங்குமாறு பசுந்தேசம் அமைப்பின் தலைவர் த.துளசிராம் கேட்டுக்கொண்டுள்ளார்.





# மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அடம்பனில் இடம்பெற்ற பொங்கல் விழா

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில், தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (19) மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ் சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்



தினராக அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் மை.கிறிஸ்ரியான் உட்பட அடம்பன் பங்கு தந்தை சீமான், சட்டத்தரணி எம்.சபூர்தீன், தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வின் ஓர் அங்கமாக வரவேற்பு நடனம், கிராமிய நடனம், கவிதை, பேச்சு, குழுப்பாடல், நவீனம் குறியீட்டு நாடகம், கருத்துக்களம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழ் சங்கத்தால் விருந்தினர்களுக்கு நினைவு சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# தேசிய மக்கள் சக்தியினரின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில்

**(எஸ்.நிதர்ஷன்)**

தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் இன்று (20) யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். பலாலி வீதி, கந்தர்மடத்தில் இன்று காலை 9.30 மணிக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனால் இது திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.







# கோபாலபுரம் பாலர் பாடசாலையின் விடுகை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

**(அபு அலா, எஸ்.எம்.முபீன்)**

திருகோணமலை, கோபாலபுரம் பாலர் பாடசாலையின் 38 ஆவது ஆண்டு விடுகை விழாவும், பரிசளிப்பும் கோபாலபுரம் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றன.

பாலர் பாடசாலையின் தலைமை ஆசிரியை பவளராசா சாந்தி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு குச்சவெளி பிரதேச சபை செயலாளர் வெளிண்டன் இந்திரஜி பிரதம அதிதியாகவும், கோபாலபுரம் வருமான பரிசோதகர் கதிரவேல் லிங்கேஸ்வரர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலை சிறார்களால் கலை கலாசார நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் பங்குபற்றிய சிறார்களுக்கும், விடுகை பெற்றுச் செல்லும் சிறார்களுக்கும் பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# பிரிட்டிஷ் பெண்ணின் நிதி அட்டையை களவாடிய நபர் ஹட்டனில் கைதானார்!

**(க.கிஷாந்தன்)**

பிரிட்டிஷ் பெண்ணொருவரின் நிதி அட்டையைக் களவாடி, ஹட்டன் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்துள்ள சந்தேக நபர் ஹட்டன் பொலிஸாரால் நேற்று இரவு (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து எல்ல நோக்கி சென்ற ரயிலில் பயணித்த பிரிட்டிஷ் பெண்ணின் நிதி அட்டையை, ஹட்டன் மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்தே இவர் களவாடியுள்ளார்.

பின்னர் ஹட்டன் நகருக்கு வந்துள்ளார். ஹட்டன் நகரில் தங்கை நகை, தொலைபேசி, ஆடை உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்துள்ளார்.

தங்கை நகையை ஹட்டனிலுள்ள தனியார் அடகு பிடிக்கும் நிலையம் ஒன்றில் அடகு வைத்து 78 ஆயிரம் ரூபா பெற்றுள்ளார்.

தனது நிதி அட்டை களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் எல்ல சுற்றுலாப் பொலிஸாரிடம் குறித்த பெண் முறையிட்டுள்ளார். இதனையடுத்து அது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணை வேட்டையில் இறங்கிய ஹட்டன் பொலிஸார், வாடகை வாகனம் ஒன்றில் எல்ல நோக்கி பயணமாக தயாராகிக் கொண்டிருந்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர். களவாடிய நிதி அட்டையில் இருந்து வாங்கிய பொருள்களையும் மீட்டனர்.

பிரிட்டிஷ் பெண்ணை ஹட்டன் வரவழைத்து, நிதி அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். குறித்த நபர் கடைகளில் வாங்கிய பொருள்கள் மீள வழங்கப்பட்டு அதற்குரிய பணமும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

# டொனால்ட் ட்ரம்புடன் முகேஷ் அம்பானி சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி யேற்கவுள்ள ட்ரம்ப் உடன் ரிலையன்ஸ் தலைவர் முகேஷ் அம்பானி மற்றும் அவரது மனைவி நீடா அம்பானி ஆகியோர் சந்திப்பு மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், 47 ஆவது ஜனாதிபதியாக வொஷிங்டனில் இன்று பதவியேற்கின்றார்.



அமெரிக்க ஜனாதிபதி பதவி யேற்ப விழாவுக்கு வெளிநாட்டு தலைவர்களை அழைப்பது வழக்கம் இல்லை என்றாலும் இந்த முறை ட்ரம்ப் வெளிநாட்டு தலைவர்கள் சிலருக்கு, அழைப்பு விடுத்துள்ளார்.

அதேபோல் தொழிலதிபர்கள் பலருக்கும் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார். அந்த வகையில் முகேஷ் அம்பானி, நீடா அம்பானிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

மேலும் அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக பதவியேற்கும் ட்ரம்ப்புக்கு வாழ்த்துகளை அவர்கள் தெரிவித்துள்ளதுடன் அவரது ஆட்சிக் காலத்தில் இந்தியா - அமெரிக்கா கூட்டுறவு இருநாடுகளுக்கும், வளர்ச்சியைத் தரும் சாத்தியங்களைக் கொண்டிருப்பதாகக் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# திருமணத்தில் இணைந்தார் ஒலிம்பிக் வீரர் நீரஜ் சோப்ரா!

ஒலிம்பிக்கில் ஈட்டி எறிதல் விளையாட்டில் இருமுறை பதக்கம் வென்ற இந்திய வீரர் நீரஜ் சோப்ரா, டென்னிஸ் வீராங்கனையான ஹிமானி மோரை அண்மையில் திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் குறித்த எந்த தகவலையும் நீரஜ் சோப்ரா வெளியிடாத நிலையில், தற்போது திருமண புகைப்படத்தை தனது சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் ரசிகர்கள், பிரபலங்கள் பலரும் மணமக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்திய இளம் ஈட்டி எறிதல் வீரரான நீரஜ் சோப்ரா, கடந்த 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்று சாதனை படைத்திருந்தார். இதன்மூலம், ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் இந்திய தடகள வீரர் என்ற பெருமையையும் நீரஜ் சோப்ரா பெற்றார். இதனையத்து 2024 ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கத்தையும் அவர் வென்றார்.

இந்நிலையில், நீரஜ் சோப்ரா ஹிமானி மோர் எனும்



டென்னிஸ் வீராங்கனையை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கரம் பிடித்துள்ளார். இவர் அமெரிக்காவின் லூசியானா பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகின்றார் எனவும், பிராங்க்ளின் பியர்ஸ் பல்கலைக் கழகத்தில் பகுதிநேர டென்னிஸ் பயிற்சியாளராகப் பணியாற்றி வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கும் கும்பமேளா: பிரதமர் மோடி பெருமிதம்

வடமாநிலங்களில் நடைபெறும் கும்பமேளா, தென் மாநிலங்களில் நடைபெறும் புஷ்கரம் ஆகிய நிகழ்வுகள் சகோதரத்துவம், நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கின்றன என்று 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

மாதம்தோறும் 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி வாயிலாக நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். நேற்று ஒலிபரப்பான 118 ஆவது நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. அங்கு மக்கள் வெள்ளம் அலைமோதுகிறது. சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமையின் சங்கமமாக கும்பமேளா திகழ்கிறது. பாரத மக்கள் மட்டுமன்றி, பல்வேறு நாடுகளை





சேர்ந்த மக்களும் குவிந்து வருகின்றனர். தெற்கு, கிழக்கு, மேற்கு என நாட்டின் அனைத்து திசைகளில் இருந்தும் மக்கள் வருகின்றனர். இந்த விழாவில் எங்கும், எதிலும் வேறுபாடு இல்லை, சாதிபேதம், ஏழை - பணக்காரர்கள் பேதமின்றி அனைவரும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுகின்றனர்.

பிரயாக்ராஜ், உஜ்ஜைனி, நாசிக், ஹரித்வாரில் கும்பமேளா நடப்பது போல தெற்கில் கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, காவிரி நதிகளின் கரைகளில் புஷ்கரம் நடக்கின்றன. நமது நதிகளோடு மக்களின் நம்பிக்கைகள் பின்னிப்பிணைந்துள்ளன. கும்பகோணம் தொடங்கி திருக்கடையூர், குடவாசல், திருச்சேறை வரை பல்வேறு கோயில்கள் கும்பத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றன. கும்பமேளா, புஷ்கரம், கங்கா சாகர மேளா ஆகிய நிகழ்வுகள் சகோதரத்துவம், நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கின்றன."- என்றார்.





# ஓராண்டுக்கு பின்னர் அமைதி நிலவும் காசா!

### 3 பிணைக் கைதிகள், 90 பாலஸ்தீனர்கள் விடுவிப்பு

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நிலையில், முதல் நாளில் 3 பணயக் கைதிகளை ஹமாஸும், பதிலுக்கு 90 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேலும் விடுவித்துள்ளன.

நீண்ட நாள்களுக்குப் பிறகு நேற்று இரவு எந்தவித தாக்குதல்களும் இடம்பெறவில்லை என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

மனிதாபிமான உதவிப் பொருள்களுடன் 630 வாகனங்கள் காசாவுக்குள் நுழைந்துள்ளன.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த ஓராண்டுக்கும் மேலாக நீடித்து வந்த போரில் பாலஸ்தீனர்கள் 47,000 பேர் உயிரிழந்தனர்.

இரு தரப்பு இடையே போர் நிறுத்தம் ஏற்படுத்த கட்டார், அமெரிக்கா சார்பில் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

பணயக் கைதிகளை விடுவித்தால் போரை நிறுத்துவதாக இஸ்ரேல் நிபந்தனை விதித்தது.

இந்நிலையில், பணயக் கைதிகள் பட்டியலை அனுப்ப ஹமாஸ் தாமதப்படுத்தியதால் 3 மணி நேரம் தாமதமாக போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வருவது தாமதமானதால் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 13 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறுகையில், "இறுதியாக மிகுந்த வலி, பேரழிவு, உயிரிழப்புகளுக்குப் பின்னர் இன்று காசாவில் துப்பாக்கிகள் மவுனித்துள் என, முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் குறைந்தது 2 அமெரிக்கர் களையாவது ஹமாஸ் விடுவிக்கும்." என்றார்.



# அமெரிக்க எல்லை பாதுகாக்கப்படும்!

### டொனால்ட் ட்ரம்ப் உறுதி

அமெரிக்காவின் எல்லைகள் பாதுகாக்கப்படுமெனவும், அனைத்து எல்லை அத்துமீறல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படுமெனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதி அளித்துள்ளார்.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால் ட்ரம்ப் இன்று பதவியேற்கவுள்ள நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிகையில்,

" நாங்கள் எங்கள் செல்வத்தை மீட்டெடுக்கப் போகின்றோம். அமெரிக்க மண்ணில் செயல்படும் ஒவ்வொரு சட்டவிரோத அன்னிய கும்பல் மற்றும் புலம்பெயர்ந்த குற்றவாளிகளையும் வெளியேற்றவுள்ளோம்.

மத்திய கிழக்கில் நீடித்த அமைதிக்கான முதல் படியாக நாங்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடைந்தோம். இந்த ஒப்பந்தம் நவம்பரில் நாங்கள் பெற்ற வரலாற்று வெற்றியின் விளைவாக மட்டுமே நடந்திருக்க முடியும். பிணைக்கைதிகள் 3 பேர் இப்போது விடுவிக்கப்பட்டனர். முதலில், நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் காசா போர் நடந்திருக்காது.

நமது நிர்வாகம் மத்திய கிழக்கில் மூன்று மாதங்களுக்குள் இவை அனைத்தையும் சாதித்துள்ளது. ஜனாதிபதியாக இல்லாமல், நான்கு ஆண்டுகளில், பைடன் ஜனாதிபதியாக இருந்து சாதித்ததை விட அதிகமாக நாங்கள் சாதித்துள்ளோம். நான் உக்ரேனில் போரை முடிவுக்கு கொண்டு வருவேன். மத்திய கிழக்கில் குழப்பத்தை நிறுத்துவேன், 3வது உலகப் போர் நடக்காமல் தடுப்பேன். "- என்று தெரிவித்துள்ளார்.




# கொலம்பியா மோதல் சம்பவம்; பலி எண்ணிக்கை 80 ஆக உயர்வு

கொலம்பியாவில் இடம்பெற்று வரும் மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது.

தொடர்ச்சியான மோதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் மேற்படி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்த சுமார் 5,000 பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கனடா முரசு
பக்கங்கள் 03
திங்கட்கிழமை 20/01/2025

## கனடாவில் தீ விபத்து சிசு பரிதாபமாகப் பலி

கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் சிசுவொன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. ஸ்காப்ரோவின் புஷ்மில் சதுக்கத்தில் அமைந்துள்ள வீடொன்றில் இந்த தீ விபத்து

02▶

# பல்லினத்தன்மையைக் கட்டியெழுப்புவதில் கனடா உலகுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது

## கனேடிய பிரதமர் ட்ரூடோ பெருமிதம்

**கனடாவில் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் தமிழர் மரபுரிமை மாதத்தின் சிறப்பு குறித்து சுட்டிக்காட்டியிருக்கும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உலகளாவிய ரீதியில் சகலரையும் உள்ளடக்கிய பல்லினத்தன்மையைக்கட்டியெழுப்புவதில் கனடா சிறந்ததொரு முன்மாதிரியாகத் திகழ்வதாகத் தெரிவித்தார்.**



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு டொரன்டோவில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூஜை வழிபாடுகள் மற்றும் தைப்பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தமது அழைப்பை ஏற்று தைப்பொங்கல் தினத்தன்று வருகைதந்த கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு நன்றி தெரிவித்த முடிக்குரிய பூர்வீகக்குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்களுக்கான அலுவல்கள் அமைச்சர்ஹரி ஆனந்தசங்கரி, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கனடாவுக்கும், ஒட்டுமொத்த உலகத்துக்கும் ஆற்றிய பணிகளுக்கும் தனது நன்றியை வெளிப்படுத்தினார்.

அதேவேளை தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் சகலருக்கும் வாழ்த்துத் தெரிவித்த உரையாற்றிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தமிழ் மரபுரிமை மாதத்தின் சிறப்பு மற்றும் அவசியம் குறித்து சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் சகலரையும் உள்ளடக்கிய பல்லினத்தன்மையைக் கட்டியெழுப்புவதில் கனடா சிறந்ததொரு முன்மாதிரியாகத் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு கனடாவில் அனைத்தும் சீராக இருக்கிறது என்று கூறமுடியாது எனத் தெரிவித்த ஜஸ்டின் ட்ரூடோ, இருப்பினும் அனைத்தும் சிறந்த முறையில் நிர்வகிப்பதையும் கட்டியெழுப்புவதையும் முன்னிறுத்தித் தாம் தொடர்ந்து செயலாற்றிவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் வேலையற்றோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கனடாவில் வேலை வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் கனடாவின் தொழிற்சந்தையில் 91000 புதிய தொழில் வாய்ப்புக்கள் சேர்க்கப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. கனடாவில் வேலையற்றோர் எண்ணிக்கை 0.1 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ஒப்பீட்டளவில் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2024ம் ஆண்டு ஆரம்பத்தை விடவும் வேலையற்றோர் எண்ணிக்கை வீதம் அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



சனத்தொகை அதிகரிப்பிற்கு நிகரான அடிப்படையில் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.



# முட்டை வாங்குவோருக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை!

கனடாவில் முட்டை கொள்வனவு செய்வோருக்கு அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த எச்சரிக்கையை கனேடிய உணவுப் பரிசோதனை முகவர் நிறுவனம் விடுத்துள்ளது.

அதன்படி, பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் சில வகை முட்டைகளில் சல்மொன்லா பற்றீரியா தாக்கம் ஏற்பட்டுள்ளதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில வகை பண்டக் குறிகளைக் கொண்ட முட்டை வகைகளில் இந்த ஆபத்து காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொம்பிலிமன்ட்ஸ், போர்மோஸ்ட், கோல்டன் வெலி, ஐ.ஜீ.ஏ மற்றும் வெஸ்டர் பெமிலி போன்ற பண்டக் குறிகளைக் கொண்ட முட்டை வகைகளில் இவ்வாறு பற்றீரியா தொற்று ஆபத்து காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஸ் கொலம்பியா, மானிடோபா மற்றும் ஒன்றாரியோ போன்ற மாகாணங்களில் இவ்வாறு பாதிப்பிற்கு உள்ளான முட்டை வகைகள் விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வகை முட்டைகள் சந்தையிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முட்டை கொள்வனவு செய்தவர்கள் மற்றும் அதனை நுகர்வோர் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தில் எட்டு மாத சிசுவொன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. மேலும் இந்த வீட்டில் நான்கு வயது குழந்தையொன்றும், 70 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும் இருந்தனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் இருந்த அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் சிசு சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

38 வயதான நபர் தனது உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த நிலையில் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பொலிஸ் தடுப்புக் காவலில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தீ விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.



# மறைமுகமாக கனடாவுக்குள் நுழையும் தடை செய்யப்பட்ட ரஷ்ய எண்ணெய்

கனேடிய வாகனங்களில் பல, தடை செய்யப்பட்ட ரஷ்ய பெட்ரோல் மூலம் இயங்குவதாக அதிரவைக்கும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

ரஷ்யா உக்ரைனை ஊடுருவியதும், ஐரோப்பிய நாடுகள் பல, ரஷ்யா மீது தடைகள் விதித்தன. முழு ஐரோப்பாவும் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை கணிசமாக குறைத்தது.

ஆனால், கச்சா எண்ணெய் வாங்குவதை குறைத்தாலும், ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து திரவ இயற்கை எரிவாயுவை வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்நிலையில், பல மில்லியன் டொலர்கள் மதிப்புடைய, தடை செய்யப்பட்ட ரஷ்ய எண்ணெய் கனடாவில் புழங்குவதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

உக்ரைன் போர் துவங்கியபிறகு, 2.5 மில்லியன் பேரல்கள் அல்லது 250 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், அதாவது, பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்கள் கனடாவுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக CBC ஊடகமும், Centre for Research on Energy and Clean Air (CREA) என்னும் அமைப்பும் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கனடா வாங்கிய எரிபொருட்கள் மூலம், ரஷ்யாவுக்கு சுமார் 100 மில்லியன் டொலர்கள் வருவாய் கிடைத்திருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

விடயம் என்னவென்றால், ரஷ்யாவின் கச்சா எண்ணெய், இந்தியா துருக்கி போன்ற நாடுகளில் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து கனடாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்கு தடையும் கிடையாது.

ஆகவே, அந்த எரிபொருட்களை வாங்குவது ரஷ்யா மீது விதிக்கப்பட்ட தடையை மீறும் செயலும் அல்ல.

ஆக, இந்த வழியில், கனடாவுக்குள் தடை செய்யப்பட்ட ரஷ்ய எண்ணெய் மறைமுகமாக நுழைவதால், அதை தடுத்து நிறுத்தவேண்டும் என Centre for Research on Energy and Clean Air (CREA) அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

